உ

# அறுபது வயது இளைஞர் கலைப்பேரரசு

கலை இலக்கியக் களம்
வெளியீடு - 1
30-4-1988

உ

# அறுபது வயது இளைஞர்
# கலைப்பேரரசு

நாடகமாமணி

## ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களின்
## மணிவிழா நினைவுச் சிற்றேடு

தொகுப்பு :
கோகிலா மகேந்திரன்

கலை இலக்கியக் களம்
வெளியீடு - 1
30-4-1988

# 'இனிய நண்பர் ஏ. ரி. பொ.'

துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்

ஈழத் தமிழர் நாடகத்தின்
எமது கால வரலாற்றில்
வாழும் கலைஞர் வரிசையிலே
வளரும் ஆர்வம் மிகவுடையார்
நாளும் கலையே மூச்சான
நண்பர் ஏ. ரி. பொ புகழில்
நீளும் நடிப்புத் துறைவல்லார்
நெஞ்சம் மகிழ வாழ்த்துகிறேன்.

குரும்ப சிட்டி வளநிலத்திற்
குருத்து விட்டுத் தளிராகிப்
பரமேஸ் வரக்கல் லூரியிலே
பயின்று பின்னர் சென்னையிலே
உரிய பட்டம் தனைப்பெற்று
உயர்ந்த பொன்னுத் துரை வாழ்வில்
அரும்பு பருவம் முதற்கலைசார்
ஆற்றல் பலவும் வளர்த்துள்ளார்.

நடித்தல் நாட கம்எழுதல்
தக்க நடிகர் தமைத்தேடிப்
படித்துப் பயிற்றி உருவாக்கி
சுவையாய் அரங்கேற் றஞ்செய்தல்
அடுத்து அந்தக் கலைதொடர்பாய்
ஆய்வு நிகழ்த்தல் புதுமைவரின்
எடுத்துப் பேணத் தக்கவற்றை
ஏற்றுக் கொள்ளல் மேடையிலே.

பலரும் உவக்க உரைநிகழ்த்தல்
தலைமை ஏற்று வழிநடத்தல்
புலமை வாய்ந்தோர் ஆற்றல்களைப்
போற்றி அவர்தம் புகழ்பேசல்
கலைஞர் தமக்குக் கைகொடுத்துக்
கௌர வித்தல் வளர்ந்துவரும்
இளைய தலைமு றையினரோ
டிணைந்து பழகி ஊக்குவித்தல்.

என்றினைய திறன்யாவும் உடைமை யாக
எய்தியநம் ஏ. ரி. பொ. தமக்கு நம்மண்
நன்றியுடன் தரும்கலைப்பே ரரசென் றோதும்
நல்விருதும் நாவலரின் பெருமை பேசும்
மன்றத்தார் நாடகமா மணியென் றோதி
மகிழ்ந்தளித்த விருதுமுள இவற்றால் மேலும்
இன்றுமிவர் வளர்கின்றார் அறுப தாண்டு
இளைஞரெனத் திகழ்கின்றார் இந்த நாளில்.

எனக்குமிவர் தமக்குமுள தொடர்பை எண்ணில்
எத்தனையோ நினைவுகள் என் நெஞ்சிற் சூழும்
முனம் ஒருநாள் 'அரிச்சந்திரா' மேடை தன்னில்
வைரமுத்து தனக்கிவர் பொன் அளித்த காட்சி
நினைவில் வரும் பின்கண்டி நகரின் சைவ
மகாசபையை வளர்த்திட்ட போது ஒன்றாய்த்
துணைநின்ற காட்சிகளும் தொடரும் பன்னாள்
தொடர்புகளை எங்ஙனம்யான் சுருங்கச்சொல்வேன்?

கலைக்கழகப் போட்டிகளிற் பங்கு பற்றி
நாடகத்தின் பிரதிகளைத் தந்த தோடு
சளைக்காமல் மாணவரைப் பயிற்றி மேடை
ஏற்றியஅந் நிகழ்ச்சிகளும் ஆர்வத் தோடு
அழைத்தபொழு தாய்வரங்கு களிற்க லந்து
கட்டுரைகள் படித்ததுவும் எல்லாம் நோக்கிக்
கலைக்காக இவர்கொண்ட ஆர்வம் கண்டு
களிகொண்டேன் நட்புநிலை வளர்த்துக் கொண்டேன்.

யானுற்ற பெருமையெலாம் தனதாய்க் கொண்டு
மகிழ்சிறந்த பண்பாளர் பலநா ளும்தன்
மாண்புற்ற குரும்பசிட்டிக் கெனைய ழைத்து
வாழ்த்தியுயர் கௌரவங்கள் அளித்தார் என்பால்
தானுற்ற தொடர்பாலும் நன்றேக் காலும்
அரங்குகண்ட துணைவேந்தர் என்னும் பேரில்
யான் பெருமை பெறஎனது அறுப தாண்டு
நாளினிலே நூல்செய்து விழாஎ டுத்தார்.

இத்தகுநற் பண்பாளர் அறுப தாண்டை
எய்திநிறை கின்றஇந்த நன்னாள் தன்னில்
சித்தமகிழ் வுடன்அவரின் திறன்கள் யாவும்
நினைவுகளில் மீட்கின்றேன் பெருமை யோடு
சித்திரையில் இன்னும்பல் லாண்டுக் காலம்
இவர்வாழ வேண்டுமென்றும் இவரால் எங்கள்
நற்கலைகள் புதுப்பொலிவு பெறுக என்றும்
நல்வாழ்த்துக் கூறுகிறேன் வளர்க! வாழ்க!

# அறுபது வயது இளைஞன்

கலாநிதி சி. மௌனகுரு

நாடக அரங்கக் கல்லூரியினருக்காகச் 'சங்காரம்' நாடகத்தைப் பயிற்றுவிக்கும்படி நண்பர் சண்முகலிங்கம் கேட்டிருந்தார். 'சங்காரம்' ஆடல் நிரம்பிய நாடகம். எனவே ஒரு மாத காலம் ஆடற் பயிற்சி பெற ஆட்களை ஆயத்தமாக்கும்படி கூறிவிட்டு, பயிற்சியளிப்பதற்காகச் சென்றிருந்தேன்: கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம். திறந்த வெளி அரங்கு. ஏறத்தாழ 48 பேர்கள் பயிற்சிக்கு ஆயத்தமாக உடையணிந்து நிற்கிறார்கள். இளம் வயதினர், முதிர்ந்த இளைஞர்கள், இளமைப்பருவத்தைத் தாண்டியவர்கள் எனப் பலர். அவர்களுள் ஒருவராகப் பொன்னுத்துரை மாஸ்டர் அவர்களும்! என்னால் நம்ப முடியவில்லை.

'நாடக உலகு' என்று ஈழத்துத் தமிழரால் அறியப்பட்டுள்ள நாடக உலகில் கணிசமான அளவு உழைப்பும், அனுபவமும், பட்டங்களும், பாராட்டுக்களும் பெற்ற வயது சென்ற - வாழ்வின் இளைப்பாறும் பருவத்தை அண்மிய ஒருவர் பயிற்சியாளனாக, மாணவனாக நிற்கிறார்.

எனக்குப் பொன்னுத்துரை மாஸ்டரைத் தெரியவில்லை, நாடகத்தில் அவர் கொண்ட உண்மையான தீவிர ஈடுபாடே பெரிதாகத் தெரிகிறது. அவர்மீது நெஞ்சார்ந்த மதிப்பு ஏற்படுகிறது. ஏறத்தாழ ஒரு மாத காலம் உடலைந் பிழிந்து எல்லோரும் பெற்ற பயிற்சியை அவரும் பெற்றார்: அந்த வயதிலும் (50) ஆட்டங்களைப் பழகினார். துள்ளிக்குதித்து ஆடினார். 50 வயதிலும் நாடகத்தைப் பற்றி மென்மேலும் அறியும் ஒரு தேடல், உண்மையான நாடக ஆர்வம்.

ஏ: ரி: பொ: என்ற இந்த மூன்று எழுத்துக்களும் கலைஞர்கள் மத்தியில் — அதிலும் சிறப்பாக நாடகக் கலைஞர்கள் மத்தியில் வெகு பிரசித்தமானது: இந்த எழுத்துக்களுக்குரியவர் திரு. ஏ: ரி. பொன்னுத்துரை மாஸ்டர் அவர்கள். மணிவிழாக் காணும் வயதும் தகுதியும் உடையவர்: உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல், எவருடனும் இசைந்துபோகும் நாகரிகமான

பண்பு. இவை அவர் இயல்புகள்; நாடக எழுத்தாளர், நடிகர், நெறியாளர், இதனைவிட கட்டுரையாசிரியர், நூலாசிரியர், இலக்கிய அபிமானி, பொதுச்சேவையாளர், அறுபது வயதினர் என்பதை நம்ப முடியாத வகையில் சுறுசுறுப்பும் கலகலப்பும். ஆம். அவர் அறுபது வயது இளைஞர்.

ஏ. ரி. பியின் வாழ்வை இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். ஒன்று அவரது குடும்பம். அதனோடமைந்த சமூகம் சார்ந்த வாழ்க்கை. குரும்பசிட்டி சன்மார்க்கசபை, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், என்பவற்றுள் இவை அடங்கும். இன்னொன்று அவரது கலை வாழ்க்கை. நாடக உலகம், இலக்கியவட்டம், நாடகஅரங்கக் கல்லூரி என்பவற்றுள் இது அடங்கும்.

சமூக வாழ்வையும், கலை வாழ்வையும் சம நிலையாக வைத்துக்கொண்டு அறுபது வயதை எட்டிப்பிடிக்கும் ஏ. ரி. பியின் வாழ்க்கை சுவாரஸ்யமானதும் நாம் அறிந்து வைத்துக் கொள்ளக்கூடிய பயன் மிக்கதுமாகும்: இந்த வாழ்க்கையினூடே ஒரு சாதாரண மனிதனுக்குரிய ஆசை, பாசம், துன்பம், துயரம் என்பவற்றுடன் ஒரு சாதனையாளனுக்குரிய உழைப்பு, உண்மையைத் தேடுதல், திறமை என்பவற்றையும் நாம் கண்டுகொள்ள முடியும்.

ஏ. ரி. பியை கலையுலகில் அறிமுகப்படுத்தியதும், பிரபல்யப்படுத்தியதும் நாடகத்துறை ஆகும்: ஏ. ரி. பி. என்றதும் திரு. பொன்னுத்துரை அவர்களுடன் இணைந்த நாடகத்துறை தான் நமக்கு ஞாபகத்திற்கு வரும்;

ஏ. ரி. பியின் நாடக வாழ்க்கையை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவு 1978க்கு முந்தியது, இன்னொரு பிரிவு 1978க்குப் பிந்தியது.

1978க்கு முன்னரும் ஏ. ரி. பி. நாடகக் கலைஞராகத்தான் இருந்தார். அவருடைய வெள்ளிவிழா மலர் முகமாக அக்காலத்தில் நாடகத்துறையில் அவரது உழைப்பைப் பற்றி அறிகிறோம். அக்காலத்தில் மத்தியதர வகுப்பினரிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த ஐரோப்பிய நாடகக் கோட்பாடுகளின் படியாகப் பெறப்பட்ட சில கருத்துக்களுக்கமைய நாடகங்களை எழுதினார், இயக்கினார், நடித்தார். பாடசாலை நாடகங்களே இவற்றுட் பெரும்பான்மை. இக்காலப்பகுதியில் அவர் நாடகத்தில்

பெரும் சாதனைகள் ஏதும் ஏற்படுத்தவில்லை. ஆயினும் அக்காலகட்டத்தில் நாடகத்துறையில் அவரது உழைப்பு விதந்தோதற்குரியது, நாடகம் எழுதியதும் பாடசாலையில் சுறுசுறுப்பாக நாடகங்களை மேடையிட்டதும் நாடகங்களில் நடித்ததும் இளம் கலைஞர்களை உருவாக்கியதும் கருந்தரங்குகளிற் கட்டுரைகளை வாசித்ததும், கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவித்ததும் என அவ்வுழைப்புப் பல தரப்படும். பணம் ஈட்டுதலையும், சேர்த்து வைத்தலையுமே வாழ்வின் பிரதான நோக்காகக்கொண்ட புதுமை பேசும் ஒரு சமூகத்தில் அந்தப் பண்பையும் மீறி பணம் ஈட்டும் நோக்கிலோ ஏனைய பம்மாத்துக்களிலோ ஈடுபடாது நாடகத்துறையில் உழைத்து கைப்பொருள் இழந்த ஏ. ரி. பி. வித்தியாசமானவராயிருக்கிறார்;

1978இல் யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதிற் களப்பயிற்சி பெற்றோரில் பழைய நடிகர் பலர். தனது 50-வது வயதிலேயே அப்பயிற்சியில் ஈடுபட்டு உடம்பை வளைத்து வருத்தி ஒரு மாணவனைப்போலப் பயிற்சிகளைப் பெற்றார் ஏ. ரி. பி. அவர்கள்; இது மிக முக்கியமானது;

ஏறத்தாழ 30 வருட நாடக வாழ்வு, பேரரசுப்பட்டம், சமூகத்தில் செல்வாக்கு, நாடகத்தில் நாலும் தெரிந்தவன் என்ற ஒரு பெயர், இவை எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டுப் பணிவாக அடக்கமாக, சாதாரண மாணவனாக அவர் பெற்ற பயிற்சிகள் பலருக்கு அவர்மீது பெருமதிப்பை ஏற்படுத்தின; நாடகம் வாழ்வில் அவருக்கு ஒரு தேடலாயிருந்தமையினால் அதுபற்றிப் புதிதுபுதிதாக அறியும் ஆர்வம் இருந்தமையினால் தன்னிலும் 20 வயது குறைந்தவரான தாசீசியஸின் கீழும், நண்பரான குழந்தை ம. சண்முகலிங்கம் கீழும் அவர் பயிற்சி பெற்றார். அப்பயிற்சி அவரிடம் ஏலவே இருந்த திறமைகளை மேலும் வெளிப்படுத்த உதவியது. அதன் பின்னால் ஏ. ரி. பியின் நடிப்பில் நாடகம் பற்றிய பார்வையில் பல வித்தியாசங்களைக் காண்கின்றோம்; நாடக அரங்கக் கல்லூரி நாடகங்களான மகாகவியின் கோடை, தாசீசியஸின் பொறுத்தது போதும், மௌனகுருவின் சங்காரம் ஆகிய நாடகங்களில் முறையே 'காவிக்கட்டாடி', 'மீனவக்கிழவன்', 'திமிர் கொண்ட எஜமானன்' ஆகிய பாத்திரங்களை ஏ. ரி. பி. ஏற்று நடித்தார்.

கோடையை தார்சீசியஸின் வழிகாட்டலில் வி. எம். குக ராஜா நெறியாண்டார். பொறுத்தது போதும் தார்சீசியஸா லும், சங்காரம் எம்மாலும் நெறியாள்கை செய்யப்பட்டது.

இம்மூன்று நாடகங்களையும் முக்கியமாக இங்கு குறிப்பிடு வதற்குக் காரணங்களுண்டு. மூன்றும் மூன்று விதமான நாட கங்கள் என்பதுடன் மூன்றிலும் ஏ. ரி. பி. தாங்கிய பாத்தி ரங்கள் மூன்றுவிதமானவை. கோடை நேர் (ஸ்ரெயிற்) நாட கம். இயற்பண்பு நெறியிலமைந்த அந்நாடக நடிப்பு முறையும் இயற்பண்பினது. அதில் வரும் காசிக்கட்டாடி மரபு முறை களுக்குக் கட்டுப்பட்டுப்போன ஒரு கிழவன் பாத்திரம். பொறுத்தது போதும் மோடியுற்ற முறையில் (ஸ்ரைலைஸ்ட்) அமைந்த ஒரு நாடகம். அதன் நடிப்பு முறையும் அவ்வாறே. கோடையிலிருந்து வித்தியாசமான நடிப்புமுறை அது. அதில் வரும் கிழவன் பாத்திரம் மரபு முறைகளை மீறி, கொடுமை களைக் கண்டு கிளர்ந்தெழுந்து இளைஞர்களுடன் இணையும் பாத்தி ரம். சங்காரம் மோடியுற்த முறையில் அமைந்தாலும் மரபுவழி ஆடல் பாடல்களைப் பற்றிய நாடகம். மரபுவழி நடிப்புமுறை களைக் கொண்டது அது. அதில் வரும் எஜமானன் மரபுமுறை களைக்] கட்டிக்காப்பதுடன், தொழிலாளர்களை அடக்கிவைக்கும் குணும்சமுள்ள பாத்திரம். இம்மூன்று பாத்திரங்களும் வித்தி யாசமான குணும்சங்கள் கொண்டவை. ஒன்றிலிருந்து ஒன்று மிக வேறுபாடானவை. வித்தியாசமான நடிப்பு முறைகளினூல் ஒவ்வொன்றினதும் குணும்சங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

இம்மூன்று நாடகங்களிலும் ஏ. ரி. பி. அவர்கள் திறமை யாகப் பிரகாசித்தார். அனுபவமும் இயல்பான திறமையும் கொண்ட அவர் முறையான பயிற்சிகளுக்கூடாக மேலும் சுடர்விட்டார்,

1986இல் சர்வதேசப் பெண்கள் ஆண்டை முன்னிட்டு பெண்கள் அடக்குமுறை சம்பந்தமாக "சக்தி பிறக்குது" நாட கம் எம்மால் மேடையேற்றப்பட்டபோது அதில் எடுத்துரைஞ ராக நடித்தார் ஏ. ரி. பி. நாடகக் கதையை நடத்திச் செல் வதுடன் கதாப்பிரசங்கி, பத்திராசிரியர், ஒலிபரப்பாளர், தொழிற்சங்கவாதி எனப் பல்வேறு பாத்திரங்களையும் உள்ள டக்கிய ஆளாக அந்நாடகத்தில் எடுத்துரைஞர் உருவாக்கப் பட்டிருந்தார். சிரமமான அம்முயற்சியில் ஏ. ரி. பி. பெரு வெற்றி பெற்றூர். 60 வயதில் அவர் நடிப்பின் முதிர்ச்சி அதிற் தெரிந்தது.

சங்காரம், சக்தி பிறக்குது நாடகங்களில் சேர்ந்து வேலை செய்தபோது ஏ. ரி. பியுடன் எனக்கு மேலும் நெருக்கமான தொடர்பு ஏற்படலாயிற்று.

நாடகத்தில் ஒழுங்குமுறைகளை வெகுவாகக் கடைப்பிடிப்பவர் ஏ. ரி. பி. நேரத்திற்கு வருவது தொடக்கம், ஏற்றுக்கொண்ட பொறுப்புக்களைச் சத்தியத்துடனும் நேர்மையுடனும் நிறைவேற்றுவது வரை ஒரு ஒழுங்கு இருக்கும். நெறியாளர் என்ற முறையில் ஏ. ரி. பியுடன் என் அனுபவம் தனியானது. பாத்திரத்தின் குணும்சத்தைத்தான் விளங்கிக்கொள்வதுடன் நெறியாளரின் கற்பனையில் அப்பாத்திரம் எவ்வாறு உருவாகியுள்ளது என்பதை அறியத் துருவித்துருவிக் கேள்விகள் கேட்டுத் தாம் நடிக்கவிருக்கும் பாத்திரத்தை முழுமையாக்கிக்கொள்வார், நாடக மேடையேற்றம் அவரைப் பொறுத்தவரை ஒரு பரீட்சை. பரீட்சையில் மிகத் திறமையாகச் சித்தி எய்தும் தீவிரத்துடன் படிக்கும் மாணவனைப்போல நாடக ஒத்திகைகளைப் பயிலுவார். நாடக மேடையேற்றத்தன்று நாடகம் தொடங்கு முன்னர் யாருடனும் பேசார். ஆரம்ப பயிற்சிகளைத் தனியாகவோ கூட்டாகவோ நின்று செய்தபின்னர் தனியாகச் சென்றுவிடுவார். பாத்திரத்தைத் தனக்குள் நிறுத்தி வசனங்களைப் பாடல்களை மீண்டும் சொல்லித் தயார் நிலையில் மேடைப்பிரவேசம் செய்வார். நாடகம் அவருக்கு ஒரு தவம். நாடகத்தில் அவர் வைத்திருந்த அபிமானத்தை, கனதியை அந்த அனுபவங்கள் மூலம் நான் கண்டேன்.

நடிப்புத் துறையோடு மாத்திரம் ஏ. ரி. பி. நின்றுவிடவில்லை. தன் திறமைகளையும் அனுபவத்தையும் பெற்ற பயிற்சிகளையும் திரட்டி அவர் நாடக உலகில் தொடர்ந்து ஈடுபடுகிறுர். மூன்று பேய்கள், பாலையும் சட்டியும், ஒரு மாணவன் ஒரு ஆசிரியன் போன்ற அவரது அண்மைக்கால நாடகங்கள் சமூகப் பிரக்ஞையுடன் இணைந்த நாடகங்களாகும்; ஈழத்துத் தமிழ் நாட உலகின் புதிய போக்கிற்கு இவையும் அணி செய்வன.

நமது நாடக மரபின் வேர்கள் நமது இடத்துக்குள் என அறிவு பூர்வமாக உணர்ந்து அத்துறையில் தீவிர ஈடுபாடு காட்டி வருகிறுர். யாழ்ப்பாணத்துத் தாளக்காவடியைப் பிர

பல்யப்படுத்தியதுடன் அதனை ஒரு அண்ணாவியாரிடம் முறையாகப் பயின்று ஆடிக்காட்டுவதுடன் அவ்வுத்திகளைக் கையாண்டு தாளக்காவடியை நவீன நாடகமாகத் தயாரிக்கவும் உள்ளார்.

நவீன நாடகங்களில் தமது கூத்துமுறைகளின் செல்வாக்குப் பற்றி தகவல்களைத் திரட்டி நூலாக எழுதும் முயற்சியிலீடுபட்டுள்ளார். சமீபகாலமாகத் தனிநடிப்பில் அக்கறை செலுத்தி அத்துறையில் ஏதாவது செய்யவேண்டும் என்ற முயற்சியிலீடுபட்டுள்ளார்.

நன்றி    மல்லிகை ஜூன் 1987

உ

# மணிவிழாக் காணும் கலைஞர்

கலாநிதி நா. சுப்பிரமணியன்
(தலைவர், கலை, இலக்கிய களம்)

கலை இலக்கியம் என்பன பலருக்கு வாழ்க்கையின் ஒருபகுதி மட்டுமே. சிலருக்கோ அவையேதான் வாழ்க்கை. இந்தச் சிலருள் ஒருவர்தான் கலைப்பேரரசு நாடகமாமணி ஏ. ரி. பொன்னுத்துரை. தமது தணியாத தாகத்தாலும் அயராத உழைப்பாலும் கடந்த (ஏறத்தாழ) நாற்பத்தாண்டுகால ஈழத்துக் கலை வரலாற்றிலே குறிப்பாக நாடக வரலாற்றிலே தனிச்சுவடுகளைப் பதித்துத் துடிப்புடன் இயங்கி வருகிறார். அக்கலைஞர் இன்று மணிவிழா ஆண்டிலே அடியெடுத்து வைக்கிறார்.

ஈழத்தின் நவீன இலக்கிய சிந்தனைக்களங்களில் ஒன்றான குரும்பசிட்டிக் கிராமத்திலே 1928 மே 15ல் ஆறுப்பிள்ளை தம்பிப்பிள்ளை என்பார்க்கு மகனாக உதித்த பொன்னுத்துரை அவ்வூர் பொன் பரமானந்த வித்தியாலயத்திலும் திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியிலும் தொடக்கநிலை இடைநிலைக்கல்விகளைப் பெற்றவர். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்று கலைமாணி (B. A.) பட்டம் பெற்றவர். நீண்டகாலம் பட்டதாரி ஆசிரியராகப் பணி புரிந்து ஈற்றில் அதிபராகவும் சிலகாலம் திகழ்ந்து அரசபணியிலிருந்து ஓய்வுபெற்றவர்.

பரமேஸ்வராக் கல்லூரியில் பயிலும் காலத்திலே 1950 அளவில் கலைத்துறையிலே நாடக நடிகனாக அடியெடுத்து லோபி என்ற நாடகத்தின் மூலம் பிரபல்யம் அடைந்த இவர் தொடர்ந்து முப்பத்தேழு ஆண்டுகளாகக் கலையையே தன் முழுமூச்சாகக்கொண்டு பணியாற்றி வருகிறார். நாடகத்துறையிலே நடிகராக, எழுத்தாளராக, இயக்குநராக, தயாரிப்பாளராக, களப்பயிற்சி வழங்குபவராக, விமரிசகராக, ஆய்வாளராக, புதுமைகளை வரவேற்கும் சுவைஞராக இவர் பன்முகப் பங்களிப்புச் செய்துவருகிறார். அத்துடன் மனித நேயம் மிக்க கலைஞர் என்ற வகையிலே பல்வேறு சமூகப் பண்பாட்டு நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இயக்கியும் வழிநடத்தியும் வருபவர். யாழ். இலக்கியவட்டத்தின் தலைவராகத் திகழ்ந்தவர். குரும்பசிட்டி சன்மார்க்கசபையின் தலைவராகவும் இருந்தார். தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின்

நாடகத்துறைத் தலைவராகவும் இணைச்செயலாளராகவும் யாழ் மாவட்ட கலாசாரப்பேரவையின் கிராமியக் கலைக்குழு உறுப்பினராகவும் இயங்கிவருபவர்.

ஏ. ரி. பொ. அவர்கள் 1950இல் கலைத்துறையில் அடியெடுத்துவைத்து 1974 வரை ஆற்றிய கலைச்சேவையைக் கணித்த ஈழத்துக்கலையுலகம் அவருக்கு கலைப்பேரரசு என்ற விருது வழங்கிக் கௌரவித்தது. அதன்பின்னர் ஈழத்துத் தமிழ் நாடகத்துறையிலே புரட்சிகரமான திருப்புமுனையாக அமைந்த நாடக அரங்கக் கல்லூரியில் இவர் பெற்ற பயிற்சி இவரது இயல்பான ஆளுமைக்குப் புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்தது.

அண்மையில் நாவலர்சபையின் நாடகமாமணி என்ற கௌரவ விருதைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு கலைத்துறையில் தணியாத தாகங்கொண்ட கலைப் பேரரசு அவர்கள் தம் ஆற்றலையும் அனுபவங்களையும் புதிய இளம் பரம்பரைக்கு உரியவாறு வழங்குவதில் ஈடுபாடு கொண்டு சபைப் பயிற்சிகள் மூலம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார். ஐம்பதுக்கு மேலே வயது போவது என்பது பலருக்குச் செயலூக்கம் குன்றுவதற்கான அறிகுறி ஆவதுண்டு. ஆனால் சிலருக்கோ அது செயலூக்கத்திற்குப் புதிய பரிணாமங்களைப் பெறுவதற்கான பருவமாற்றமாக அமைவதுண்டு. ஏ. ரி. பொ. இந்த இரண்டாவது வகைசார்ந்தவர். அவ்வகையில் இன்றும் இளைஞராக உள்ள அவரை இன்னும் பல்லாண்டு வாழ்ந்து கலைப்பணி புரிக என ஈழத்துக் கலையுலகம் வாழ்த்துகிறது.

நன்றி

1987 - 05 - 15 ஈழநாடு

உ

# ஆயிரம் பிறை கண்ட கலைஞர் ஏ. ரி. பொ.

அநு. வை. நாகராஜன்

கலைஞருள் மூவகையினர் உளர். ஒருவகையினர் பிறவியிலேயே தாம் சார்ந்த கலையில் தேர்ந்த ஞானமும் தேர்ச்சியுங்கொண்டு மாமேதாவிலாசத்தோடு விளங்குகிறார்கள். இவர்களைப் பிறவிக்கலைஞர் எனலாம். அடுத்த வகையினர் கல்வி — கேள்விகளால் தாம் சார்ந்த கலையில் அறிவுசார்ந்த தேர்ச்சியும் நடைமுறை அநுபவமுங்கொண்டு இருப்பார்கள். இவர்களை அறிவுசார்க் கலைஞர் எனலாம். இவ்விரு வகையினரையும்விட மூன்றாம்வகைக் கலைஞர், அறிவு — ஆர்வம் — சுயவூக்கம், விடாமுயற்சி என்பவற்றால் தமது சூழலின் தூண்டற் பேறுகளைப் பெற்றும் அவற்றை விருத்தி செய்தும் தமது கலையீடுபாடுகளை முன்னெடுத்துச் செல்பவர்களாக இருக்கிறார்கள்.

மேலும், இம்மூவகைக் கலைஞர்களின் குணவியல்புகளும் செயற்பாடுகளும் அவரவர் வகைக்கேற்ப இருப்பதையுங் காணலாம். முதலாம் வகையினர் பெரும்பாலும் தமது கலையின் அதிதீவிர ஞான மேதாவிலாசங் காரணமாகத் தன்னம்பிக்கையும் இறுமாப்புந் தொனித்து நிற்பதைக் காணுகிறோம். இதேபோல், இரண்டாம் வகையினர் தமது கலையை அறிவு சார்ந்த தேர்ச்சியிற் பெறுபவராதலால் எப்பொழுதும் தேடலில் மூழ்கி— குறைக்குட நிலையில் ஒருவகைத் தாழ்வுச் சிக்கலில் நிற்பதைக் காணலாம். இவ்வகுப்பாரிடம் சிலவேளைகளில் காய்தல் — உவத்தல் போன்ற நிலைப்பாடுகள் அடிமனத் தூண்டல்களாக விளங்குவதையுங் காணலாம். ஆனால் மூன்றாம் வகுப்பினரோ, முன்னிரு வகையினரிலும் மாறுபட்ட நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் தமது சூழ்நிலைத் தேடலில் வளர்க்கப்படுபவர்களாக இருக்கிறார்கள். அதனால் அத்தகையோர் எப்பொழுதும் தமது கலையில் நேர்மையும் விசுவாசமும் பற்றும் உடையவர்களாக இருப்பார்கள். அதனை நேர்வழியிலும் நடத்தி வைப்பார்கள், இவர்களால் இவர்சார்ந்த கலையும் வாழும். அக்கலையால் இவர்களும் வாழ்வார்கள்.

மேற்கூறிய மூவகைக் கலைஞர்களுள் இறுதியாகச் சுட்டிய கலைஞர் வரிசையில் எமது நண்பரும், கலைஞருமான கலைப்பேரரசு திரு, ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் இருக்கிறார் என்பது எனது கருத்தாகும்.

இவருடைய முன்னுரக்கியும் இனிய நண்பருமான இரசிகமணி கனக. செந்திநாதன் வார்த்தையில் உரைப்பதானல் —

''ஏ. ரி. பி. தனக்குத் தெரிந்த நாடகத்துறையைப் பற்றியே சிந்திக்கிறார்—எழுதுகிறார். அதுகூட. அவரது ஒவ்வொரு மயிர்க்காலிலும் இதயத் துடிப்பிலும் விரவி நிற்பது நாடகம். அவருக்கு நாடகம் என்றால் ஒரு பைத்தியம்.''

இந்த 'பைத்தியம்' என்னுடன் பழகிய காலம் (1980லிருந்து) குறுகியதாயினும், இவர் உறவு ஒரு முன்னைத் தொடர்பு? அது விட்ட தொட்ட குறையைத் தொடர்ந்து நிற்கிறது. இத் தொடர்பு காரணமாக இவரது கலைத்துவம், கலையார்வம் கலை மேம்பாடு என்பவற்றை அருகிலிருந்து அநுபவிக்கும் பேறுபெற்று நிற்கிறேன்.

இவர் சிறுவராக இருந்த காலத்தில் தனது ''தன்போக்கு''க் காரணமாகத் தன்னூரிலும், அயலிலும் நிகழ்ந்த கலை, இலக்கியக் கோலங்களைக் கண்டுகளிப்பதில் பேரின்பம் கண்டார், குறிப்பாக அந்நாளில் விடிய விடிய நடந்த நாடகங்கள் காவடியாட்டங்கள், திருவிழாக்கள், சினிமாக்களில் தன் பொழுதைப் போக்கினார். இதனல் வீட்டில் அளவுக்கு மீறிய கண்டிப்பும் தண்டனையும் பெறவேண்டியும் இருந்ததாம். இருந்தும், இவரது கலை நாட்டம் இளமையிலேயே கருக்கொள்வதாயிற்று.

இவர் பரமேஸ்வராக்கல்லூரி மாணவனுக இருந்தார். இக்கல்லூரி, அந்நாளில் ஒரு கல்விப்பீடமாக மட்டுமன்றி சகல கலை இலக்கியப் பீடமாகவும், அதற்கேற்ற ஆசான்களைப் பெற்றும் மிளிர்ந்தது. அச்சூழல், இளம் பொன்னுத்துரைக்கு ஓர் அரிய விளை நிலமாக வாய்த்தது. அப்பொழுது தான் (1950ல்) அதிபர் சி. சிவபாதசுந்தரனுரின் தூண்டுதலாலும் 'சானு' (சண்முகநாதன்) வின் நெறியாளுகையாலும் மேடையேறிய மோலியரின் உலோபி என்ற பிரஞ்சு நாடகத் தழுவலான 'லோபியின் காதல்' இல் முக்கிய பாத்திரமேற்று முதன்முதலாக நடிக்கும் சந்தர்ப்பம் பொன்னுத்

துரைக்குக் கிடைத்தது. இம்முதல் நாடகத்திலேயே தனது முழுவாற்றலையும் முயற்சி, ஊக்கம், இடையறாப் பயிற்சி என்பவற்றால் வெளிப்படுத்தினார். 'அதன் பயனாக' ''கலையரசு'' சொர்ணலிங்கம் இவர் (ஏ. ரி. பி.) ஒரு குணசித்திர நடிகராக வருவார் என்றும் என்னைப்போல் ஒருத்தனை இன்றைக்குத் தான் மேடையில் காணுகிறேன் என்றும் வாயார — மனமார வாழ்த்தினார். அந்த வகையில் 'சானா'தான் தனது முதல் நாடக ஆசான் என்றும், கலையரசு அவர்கள் ஏற்றிவைத்த தீபம்தான் தான் என்றும் திரு. ஏ. ரி. பி. இன்றும் எமக்கு அடிக்கடி கூறுவதுண்டு.

இவ்வுந்தலில் நாடக எழுத்திலும் கைவைத்துத் தனது முதலாவது படைப்பான 'விதியின் பரிசு' எனும் நாடகத்தை எழுதியதோடு அதில் நடித்தும் நெறியாளுகை செய்தும் குரும்பசிட்டி சன்மார்க்கசபை மேடையில் 1951ல் மேடையேற்றினார். இஃது அவரது கன்னி முயற்சி இதே காலத்தில் இரசிகமணி கனக. செந்திநாதன் கலைமகளில் வெளிவந்த அப்புஸ்வாமியின் 'தாகம்'த்தை மேடையேற்றியபோது, அதிலும் முக்கிய பாத்திரமான 'மந்திரவாதி'யின் பாகத்தை ஏற்று நடித்துப் பலருடைய பாராட்டையும் பெற்றார்.

இதனைத் தொடர்ந்து தனது சென்னைக் கல்லூரிநாளில், 'முதலாளி தொழிலாளி' (1952ல்) 'குவேனி' (1953ல்) 'ராகி மைடியர்' (1954ல்) எனும் நாடகங்களை எழுதியும், நடித்தும் தன் புகழுக்குக் கொடி காட்டினார்.

இதன்பின் இலங்கை வந்து 'இருமனம்' (1956ல்) தேவனின் 'கற்புக்கனல்' (1958ல்) பாலச்சந்திரனின் 'பதியூர்' ராணிபோன்றவற்றில் நடித்தார். அத்தோடு தனது படைப்பாக 'நிறைகுடம்' (1961ல்) 'பண்பின் சிகரம்' (1962ல்) 'பாசக்குரல்', 'செங்கோல் சரிந்தது' (1965ல்) 'இறுதிப்பரிசு. (1968ல்) என்பவற்றையும் படைத்தார். இதே காலத்தில் மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத் தயாரிப்பான 'ஆராமுது அசடாவி'லும் நடித்துப் பாராட்டுப் பெற்றார்;

இக்காலத்திலேயே இலங்கை வானொலி நாடக முயற்சிகளிலும் ஈடுபட்டு 'இறுதிப்பரிசு', 'காதல் கைநட்டம்' (1960) வருஷம் பிறந்து முன்னம் முன்னம் (1982ல்) போன்ற படைப்புகளையும் அளித்தார். இவற்றோடு நாடகக் கருத்தரங்கு

களிலும் பங்குபற்றிப் 'பாடசாலை நாடகம்', நகர்ப்புற நாடகங்கள், நாடகமும் மரபும் போன்ற ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்தார். மேலும், இதே காலத்தில் வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும், கலைச்செல்வி, மல்லிகை, தீபம், கலைக்கண் போன்ற மாசிகைகளிலும் நாடகம் சார்ந்த பல கட்டுரைகளையும் வரைந்தார். அதே வேளையில், கலைக்கழகம் நடத்திய ஓரங்க நாடக எழுத்துப்போட்டியில் 'நாடகம்' (1966ல்) எனும் எழுத்துக்கு இரண்டாம் பரிசும் 'நாம் ஒன்று நினைக்க' (1967ல்) என்பதற்கு முதலாம் பரிசும் பெற்றிருக்கிறார்.

இந்நாளில் ஐம்பதுக்கு மேற்பட்ட தரமான நாடக அரங்குகளில் தான் ஏறியதாக மிகவும் மனப்பூரிப்புடன் கூறும் திரு. ஏ. ரி. பொ. அதேவேளையில் அவற்றுக்குத் தன்னை ஊக்கியவர்களையும் தன்னுடன் ஒத்துழைத்தவர்களையும் மனதாரப் போற்றி மகிழ்கிறார். இதில் கலைஞர்கள், அறிஞர்கள், நண்பர்கள், உறவினர்கள் எனப் பலர் அடங்குவர்; அவர்களுள் குறிப்பாக நடிகமணி வி. வி. வைரமுத்து இலங்கையர்கோன், சாறு, மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றப் புரவலர் திரு. பொ. செல்வரத்தினம், மாவை முத்தமிழ் மன்ற முதல்வரும் ஆதீன முதல்வருமான மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள். இரசிகமணி கனக செந்தில்நாதன், கே. பி. ஹரன், பேராசிரியர் சு. வித்தியானந்தன் என்போரை இங்கு சிறப்பாகக் குறிப்பிடலாம். இவர்களுடன் குரும்பசிட்டி சன்மார்க்கசபையையும் சேர்த்துக்கொள்ளலாம்.

1973 நவம்பரில் ஒலிபரப்பான இவரது 'தாளக்காவடி' வானொலி நாடகம் இரண்டு தடவை ஒலிபரப்பப்பட்டது. இந்நாடகம் கிராமியக்கலையை (காவடி) புதிய வார்ப்பில் தாளத்துக்கும் லயத்துக்கும் முன்னிடங்கொடுத்து எழுதப்பட்டது. பின்பு இது 1975இல் மேடை நாடகமாக எழுதப்பட்டு மேடையேற்றப்பட்டபோது பெரு மதிப்புக்குரிய ஒரு நாடகம் எனப் பலராற் புகழப்பட்டது.

இவரது நாடக ஈடுபாட்டைச் சிறப்பிக்குமுகமாக 1974ல் நாடக ஆர்வலர் பலர் இவருக்கு வெள்ளிவிழாவெடுத்து கலைப்பேரரசு' எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

கலைப்பேரரசு அவர்களின் பணி வரும் ஆண்டுகளிலும் வளரும்! வளர்ந்து தொடரும்!

இதனையடுத்து. 'கலைப்பேரரசின்' கலைவெளிப்பாடுகள் புதிய தேடலில் - குறிப்பாக 'நவ உத்தி' நாடகங்களில் திரும்

பியலைக் காணலாம். பழைய மரபுக்கலைகளைப் புதிய வார்ப்பில் மக்களுக்குப் பாய்ச்ச வேண்டும் என்ற நோக்கில், 1956ல் எழுந்த 'ஓரலை' யாழ். மேடைகளுக்குக் காலந் தாழ்த்தி வந்தது. இதற்குப் பல்கலைக்கழக மட்டத்தில் வித்திட்ட பெருமை பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கு முதற்கண் சேருகிறது. ஆயினும், இதனை வலுப்பிடியாக இங்கு ஓர் ஒழுங்கு முறையில் — பயிற்சி மூலம் கொண்டு வந்தவர் திரு. அ. தாசீஸியஸ்தான். இவர் தனது நாடக அரங்கக் கல்லூரியில் நாடகக் களப் பயிற்சி — பட்டறை (Work Shop)க்கு மாணவர்களைச் சேர்த்தபொழுது, வயதில் முதிர்ந்து இருந்தும், தானும் ஒருவராகச் சேர்ந்தவர்தான், திரு. ஏ. ரீ. பொ. ''அரங்கக் கல்லூரியின் தொடர்பு எனக்கு, எனது நாடக அநுபவங்களை மெருகூட்டவும், புதிய உத்தியில் என்னைப் புடம் போடவும், பெருமளவில் உதவியது'' என்று அவரே பல தடவைகள் எனக்குக் கூறி மகிழ்வார்.

இதன்பேரில், அகில இலங்கை முதற்பரிசு பெற்ற தாசீஸியசின் ''பொறுத்தது போதும்'' எனும் நாடகத்தில் இவரும் நடித்துப் புகழ்பெற்றார். மேலும், மஹாகவியின் ''கோடை'', மௌனகுருவின் ''சங்காரம்'' போன்ற நவீன உத்தி நாடகங்களிலும் இவர் நடித்தார்.

முன்னைய கூறுகளில், இவர் நடித்த நாடகங்கள்—எழுதித் தயாரித்த நாடகங்கள் — எழுதிய நாடகக் கட்டுரைகள் — நெறியாளுகை செய்த மேடைநாடகங்கள் என்பனவற்றின் அளவுக்கு இந்தக்கூறில் அதிகம் இல்லை. இதுஒரு குறையாகக் கூறுவதிலும் நிறைவென்றே யான் கூறுவேன். ஏனெனில், இப்பொழுது இவரது அநுபவ முதிர்வுகள் வெவ்வேறு துறைகளில்—குறிப்பாக, கலை—இலக்கியத் துறைகளோடு தனது சுய ஆன்மீகத் தேடலிலும் ஈடுபடுவதைக் காணுகிறோம். இவரைப் பொறுத்த மட்டில், இஃதோர் ஆரோக்கியமான ஈடுபாடேயாகும்.

இவை ஒருபுறமிருக்க, அவை யாவற்றிலும் மேலாக இவரிடத்துக் காணப்பெறும் பண்புகளும் விழுமியங்களுமே இவரை மேலான—உண்மையான கலைஞராக எமக்குக் காட்டுகின்றன. இவரிடத்துக் காணப்பெறும் இவை, ஏனைய கலைஞர்களிடம் ஒருசேரக் காணப் பெறாதவையாம், இவரது தனித்துவமான சால்புகள் மனிதத்துவமானவையாகவும், உள்ளுணர்வு உள்ளவையாகவும் உள்ளன.

"பார்த்தால், அப்பாவி. பேச்சு, ஒரு மிழற்றல். சிரித்தால், குழந்தை." என்று பல்லாண்டுகளுக்கு முன்பு — அதிபர் சி. சிவபாதசுந்தரனார், திரு ஏ. ரி. பொ. வைப் பற்றி ஓரிடத்தில் ஒரு வரி எழுதியிருக்கிறார். இது சாலவும் பொருந்தும். இவ்வரியில் அடங்கும் அவருடைய காட்சி—பேச்சு—செயற்பாடு எனும் இம்மூன்றும் அவருடன் என்றும் உறவாடும் அரிய பண்புகளாம். குறிப்பாக—இந்த அறுபது வயதிலும்—காட்சிக்கு எளியராய்—பேச்சுக்கு இனியராய் இருக்கும். ஏ. ரீ. பீ. ஒரு குழந்தைபோல், பழகுவோரிடத்திற் பழகுகிறார். இக்குழந்தைமைப் பண்புடன் எப்பொழுதும் 'நான் ஒரு மாணவன்' என்ற நிலையில் நிற்கிறார். எவரிடத்திலும் என்ன என்ன அறிவுக் கோலங்கள் உண்டோ, அவற்றை எல்லாம் 'பெரிசு சிறிசு' பாராது கற்கிறார். இன்னும் அவற்றுக்காக அலைகிறார்.

இவரிடத்தில் இருக்கும் இன்னும் ஒரு சிறந்த பண்பு—"பிறர் மகிழத் தான் இன்புறும் குணப் பண்பே" ஆகும். அதுவே, பேராசிரியர் சு. வி. கூறுவது போல்—"கலைவாழ்வில் இவருக்குத் தனிச் சிறப்பை அளித்திருக்கிறது." போலும்.

கலையுலகில், தனது வெள்ளி விழாவைக் கண்டு இன்று மணி விழாவில் நிற்கும் கலைஞர் பொன்னுத்துரை, தன் வாழ்விற் கண்டவை பல—கற்றவை அளப்பரியவை. அவற்றுள்ளும், தன் தடத்தை விட்டுப் பிறழாது, ஓர் உண்மைக் கலைஞனாக—கலை ஆர்வலனாக—சுவைஞனாக நிற்கிறார். எனவே இவர் நலம், கலையுலகுக்குப் பண்பும் பயனுமாய் விளங்கும்.

(நன்றி—"தினகரன்" வார மஞ்சரி
17-05-87.)

உ

# ஏ. ரி. பொன்னுத்துரை பதில்கள்

## முரளி

கேள்வி: நாடக மூலம் தாங்கள் வளர்த்துக்கொண்ட பண்புகள் எவை?

பதில்: இங்கிதமாக வார்த்தையாடுதல் - பழகுதல், ஒன்றில் முழுமையாக ஈடுபடும் பயிற்சி கூட்டுறவாகத் தொழிற்படும் பாங்கு, சமூகத்துக்குப் பயன்படுவற்றைச் செய்ய முன்வருதல் முதலிய பல நல்ல பண்புகளை நாடகம் எனக்குக் கற்பிக்கது என்றால் மிகையாகாது. சாதி மத வேறுபாடு அற்று சகோதரத்துவத்தைப் பேணவும் நாடகம் பயன்படுகிறது.

கேள்வி; நாடகம் வளர்த்திட நடத்திடத் தாங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?

பதில்: நாடக அரங்க வியலைக் கற்க மாணவர்கள் ஆசிரியர்கள் முன்வரவேண்டும் நாடகப் பட்டறையில் பயிற்சி பெற முனையவேண்டும் காத்திரமான படைப்புக்களை இதன் மூலம் நன்கு விளங்கலாம்; உத்திகள் பற்றிய அறிவு நாடகம் நயக்கத் துணைபுரியும். பணம் கொடுத்துப் பல தடவை பார்க்கப் பார்க்க தரமாள ஆக்கங்கள் உருவாகும். சுபடமான கண்டனங்கள் வீண் முயற்சியே.

கேள்வி: நாடகம் வளரத் தங்கள் எதிர்காலத் திட்டமென்ன?

பதில்: இன்றைய நாடகங்களில் நாட்டுக்கூத்துக்களின் தாக்கம் பற்றிய நூல் பிரசுரித்தல்;

கலை இலக்கிய களம் நிறுவனம் மூலம் பரீட்சார்த்த நாடகங்களை மேடையிடல், பட்டறை நடத்துதல்.

வட இலங்கைச் சங்கீதசபையும், யாழ்; கல்விப்பகுதியும் இணைந்து நடத்தும் பரீட்சையில் நாடக அரங்கவியல் பாடத்துக்கு மாணவர்களைத் தோற்றச்செய்ய உதவுதல்; வகுப்புகள் நடாத்துதல்;

நாடக உத்திகள் பற்றிய விளக்கங்களைப் பேச்சு, பயிற்றிக் காட்டல் மூலம் சுவைஞர்களுக்குப் புகுத்துதல்;

நன்றி ஈழநாடு வாரமலர் 16 - 11 - 86

கலைப்பேரரசின் வழிகாட்டலில் வளரும்
# கலை இலக்கியக் களத்தின்
# நாடகத்துறை மாணவர்கள்
# 1987 - 1988

| | |
|---|---|
| சி. ம. பிரவீணன் | சு. ஷர்மிளா |
| ஜெ. ஆரணி | வா. தமிழினி |
| மு. சதீஷ்பாலமுருகன் | ஜெ. சுதர்சினி |
| வா. வலவன் | சோ. நளாயினி |
| ந. தமயந்தி | சி. சிவரதி |
| ச. கௌசீதகி | ச. சாந்தரூபி |
| பா. பாமினி | ந. பாலரஜனி |
| ச. ரூபினி | ஜீ. பகீரதி |
| இ. சுகிர்தா | சோ. கீதா |
| சு. சுபாஜினி | நா. கண்டீபன் |
| ஜீ. சிவதர்சினி | கு. நந்தினி |
| சு. பாரதி | ஏ. வசந்தரூபி |
| சு. திலீபன் | ஜீ. சிவப்பிரியா |
| த. சாந்தினிதேவி | சி. வாசுகி |
| இ. வசுமதி | சி. கௌசலா |
| இ. சுபாதினி | இ. பூங்கொடி |
| ஏ. சிவரூபி | பா. கோமதி |
| ஜெ. கிரிதரன் | ச. தில்லானா |
| திருமதி கௌ. சுப்பிரமணியன் | திருமதி கோகிலா மகேந்திரன் |

குகன் அச்சகம் — தெல்லிப்பழை